ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2172/7 - 2020 අප්‍රේල් මස 22 වැනි බදාදා - 2020.04.22

*2172/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 04/ 2020*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை பொது மக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஏப்பிறல் 22.

1A - PG 4972 — 567 (2020/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்*

கட்டளை

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, இக்கட்டளை மூலம் தேவைப்படுத்துகின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஏப்பிறல் 22.*

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. ப. த. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **27.10** | | | பெற்றோலியம் எண்ணெய்களும், நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணெய்களும், சுத்திகரிக்கப்படாதவை தவிர்ந்தவை : வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப்படாத நிறையில் 70% அல்லது கூடுதலாக பெற்றோலிய எண்ணெய் அல்லது நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணெய்யைக் கொண்ட தயாரிப்புகள், இவ்வெண்ணெய்கள் இத்தயாரிப்புகளின் அடிப்படை உள்ளீடுகளாக இருக்க வேண்டும் | | | |
| | | - | நிலக்கீழ்சார்ந்த கனிப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண்ணெய்கள் மற்றும் எண்ணெய்கள் (சுத்திகரிக்கப்படாதவை தவிர) மற்றும் வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத தயாரிப்புகள், நிலக் கீழ்சார்ந்த கனிப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண்ணெய் அல்லது எண்ணெய்களானது நிறையளவில் 70% அல்லது அதற்கு மேற்பட்ட அளவினைக் கொண்டவை, இவ்வெண்ணெய்கள் தயாரிப்புகளானது அடிப்படை உள்ளீடுகளாக இருத்தல் வேண்டும். அவை பயோ டீசலினைக் கொண்டவை தவிர மற்றும் கழிவு எண்ணெய்கள் தவிரவும் | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இ. ப. த. இல. (1) | இ. ப. த. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | --- | பெற்றோல் : | | | |
| | 2710.12.21 | ---- | ஒக்டேன் இல. 92 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 50.00 | கி. கிராம் |
| | 2710.12.22 | ---- | ஒக்டேன் இல. 95 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 50.00 | கி. கிராம் |
| | 2710.12.29 | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 50.00 | கி. கிராம் |
| | | | | | | |
| | | --- | வாயு எண்ணெய்/டீசல் | | | |
| | 2710.19.41 | ---- | சுப்பர் டீசல் - 10 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்படாத கந்தகம் அடங்கிய | | ஒரு லீற்றர் ரூபா 25.00 | கி. கிராம் |
| | 2710.19.42 | ---- | பிற டீசல் - 10 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்பட்ட எனினும் 500 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்படாத கந்தகம் அடங்கிய | | ஒரு லீற்றர் ரூபா 25.00 | கி. கிராம் |
| | 2710.19.49 | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 25.00 | கி. கிராம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.